செ.வெ.எண்:14 நாள்:9.5.2018

# செய்திக் குறிப்பு
# கரூர் மாவட்ட அரசு இசைப்பள்ளியில் மாணவர் சேர்க்கை

தமிக அரசு கலை பண்பாட்டுத்துறையின் கீழ் இயங்கும் கரூர் மாவட்ட அரசு இசைப்பள்ளி தொடங்கப்பட்டு 20 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இசைப்பள்ளியில் **குரலிசை, நாதசுரம், தவில், தேவாரம், பரதநாட்டியம், வயலின், மிருதங்கம்** ஆகிய கலை பிரிவுகளின் முழுநேர வகுப்பாக இசைக்கல்வி சிறப்பாக பயிற்றுவிக்கப்படுகிறது. 3 ஆண்டுகள் முறையான பயிற்சிக்குப் பின் அரசு தேர்வுகள் நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தற்போது 2018-2019ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவ-மாணவிகள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. நாதசுரம், தவில் துறையக்கு எழுதப்படிக்க தெரிந்திருந்தால் போதுமானது. 12 வயதிற்கு மேல் 25 வயதிற்குட்பட்ட ஆண் பெண் இருபாலரும் சேரலாம். மாணவர்கள் பெருமளவில் சேர்ந்து பயன்பெற குறைவான பயிற்சி கட்டணமாக ஆண்டிற்கு ரூ.152/- மட்டும் பெறப்படுகிறது. தொலைவில் இருந்து வரும் மாணவ மாணவியருக்கு தமிழக அரசு இலவசமாக தங்கும் விடுதி வசதி மற்றும் இலவசமாக அரசு பேருந்துகளில் இசைப்பள்ளிக்கு வந்து செல்வதற்கு இலவச பேருந்து பயண அட்டையும் வழங்கப்படுகிறது. தமிழக அரசால் இசைக்கலை வளர இசைப்பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.400/- ஊக்கத் தொகையான வழங்கப்படுகிறது. இசைப்பள்ளியில் படித்த மாணவர்களுக்கு அரசுத்துறை மற்றும் ஆலயங்களில் வேலை வாய்ப்பு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றது. வெளிநாடுகளிலும் வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. கலை ஆர்வமும் திறமையும் உள்ள மாணவ-மாணவிகள் 944, ஜவஹர் பஜார் கரூர் என்ற முகவரியில் உள்ள மாவட்ட அரசு இசைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி. நா.ரேவதி அவர்களை அணுகி இசைப்பள்ளியில் சேர்ந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கைபேசி எண்.9500277994, 9500511847.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

கரூர்.